**Starting time 11.47 A.M.**

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No.375/2013**

Deposition of **P.W. 2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 14-12-2022 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகேசன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால், இல்லை. வாதி சின்னாசமி எனக்கு மாமா முறை என்றால், சரிதான். நான் கடம்பூர் கிராமம் அருந்ததியர் தெருவில் குடியிருந்து வருவதற்கு ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் 75-கிருஷ்ணாபுரம் கிராமத்தில் நிலத்தை குத்தகைக்கு பயிர் செய்து அங்கேயே வசித்த வருகிறேன் என்றால், சரிதான். ஆரம்பத்தில் வாதி சின்னாசாமி தாவா சொத்தில் வில்லை வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால், சரிதான்.

2. அதன்பின் சின்னசாமி கடந்த 14.06.2006 அன்று தாவா சொத்தை கணபதி என்பவருக்கு விற்பனை செய்துவிட்டு ராசிபுரம், நாறைகிணறு கிராமத்திற்குச் சென்றுவிட்டார் என்றால், சரிதான். 14.06.2006 முதல் வாதி மேற்படி நாறைகிணறு கிராமத்தில்தான் குடியிருந்து வருகிறார் என்றால், தாவா சொத்தை மறு கிரயம் பெறும் வரை அங்கு குடியிருந்து வந்தார், மறு கிரயத்திற்குப் பின்னிட்டு தாவா சொத்தில் குடியிருந்து வந்தார். 14.06.2006 தேதியிலிருந்தே வாதி நாறைகிணறு

கிராமத்தில்தான் குடியிருந்து வருகிறார் என்றும், ஆனால் மறு கிரயத்திற்கு பின்னிட்டு தாவா சொத்தில் குடியிருந்து வருவதாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

3. வாதிக்கு கடம்பூர் கிராமத்தில் வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை ஆகியவை இல்லை என்றால், மறு கிரயத்திற்கு பின்னிட்டு உள்ளது. வாதிக்கு கடம்பூர் கிராமத்தில் ஆதார் அட்டை, குடும்ப அட்டை உள்ளிட்டவை உள்ளதா என்று நான் பார்த்தேனா என்றால், இல்லை. வாதி அவரது இருப்பிடத்தை நிரூபிக்க என்னென்ன ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால், தெரியாது. 13.05.2013 தேதியிட்ட கிரயப்பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால், இல்லை. எதன் அடிப்படையில் மேற்படி கிரயப்பத்திரம் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால், தெரியாது.

4. வீடு சேதம் அடைந்ததால் அதை செலவு செய்து சீர் செய்தார் என்று சொல்வது எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சீர் செய்தது தெரியும், ஆனால் எவ்வளவு செலவானது என்று தெரியாது. நான் சொல்வதுபோல் வீடு சேதமும் அடையவில்லை, அதை வாதி செலவு செய்து சீர் செய்யவும் இல்லை என்றால், சரியல்ல.

5. 13.05.2013 தேதியிட்ட கிரயப்பத்திரத்தில் உள்ள சொத்தின் சர்வே எண், நீள அகலம் என்னவென்றால் சர்வே எண் 105/2 ஆகும். விஸ்தீரணம் கிழமேல் 17 அடி, தென்வடல் 18 அடி ஆகும். மேற்படி நீள அகலத்தை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். தாவா சொத்தின் கதவு எண் என்னவென்றால், பழைய எண் 7-வது வார்டில் கதவு எண் 10, புதிய எண் 8-வது வார்டில் கதவு எண் 245 ஆகும்.

6. தாவா சொத்தின் கிழபுறம் கலாராணி என்பவர் வீடு உள்ளது என்றால், தற்போதுதான் கலாராணி வீடு உள்ளது, 2013-ம் ஆண்டு பெரியசாமியின் வீடு இருந்தது. நான் சொல்வது தவறு என்றும், 17.09.2010 அன்றே தாவா சொத்தின் கிழபுறம் உள்ள சொத்தை கலாராணி என்பவர் கிரயம் பெற்றுள்ளார் என்றால், சரியல்ல.

7. பிரதிவாதிகள் குடியிருந்துவரும் வீட்டின் சர்வே எண், நீள அகலம், செக்குபந்தி உள்ளிட்டவைகள் எனக்கு தெரியாது என்றால், சர்வே எண் 102/5, கிழமேல் 17 அடி, தென்வடல் 18 அடி, வீதிக்கு தெற்புறமும், ரோட்டுக்கு மேல்புறம், மோகன் வீட்டிற்கு வடபுறம், சிலம்பரசன் வீட்டிற்கு கிழபுறம் உள்ள வீட்டில் பிரதிவாதிகள் வசிக்கிறார்கள். கதவு எண் தெரியுமா என்றால், தெரியாது. நான் சொல்லும் மேற்படி செக்குபந்திக்குள் பிரதிவாதிகள் வசித்துவரவில்லை என்றும், தாவா சொத்தில்தான் அவர்கள் வசித்து வருகிறார்கள் என்றும், தாவா சொத்திற்கான கதவு எண் 7/10-ல் உள்ள விலாசத்தில்தான் பிரதிவாதிகள் பெயரில் குடும்ப அட்டை உள்ளது என்றால், சரியல்ல.

8. 2006 ஆண்டே பிரதிவாதிகள் தாவா சொத்தை வாதிகளிடமிருந்து கிரயம் பெற்றார்கள் என்றும், அந்த தேதியில் பிரதிவாதிகள் பெயரில் குடும்ப அட்டை இல்லாததால் 2-ம் பிரதிவாதியின் தகப்பனார் கணபதியின் பெயரில் கிரயம் வாங்கினார்கள் என்றும், அதுமுதல் தாவா சொத்தில் பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றும், தாவா சொத்தின் கிரயத்தொகையை பிரதிவாதிகள்தான் கொடுத்தார்கள் என்றால், சரியல்ல. 13.05.2013 அன்று 2-ம் பிரதிவாதியின் தகப்பனார் வாதி பெயரில் பெயரளவில் ஒரு கிரயப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், அக்கிரயப்பத்திரம் நடைமுறைக்கும் வரவில்லை என்றால், சரியல்ல. 2013-ம் ஆண்டு தாவா சொத்திலிருந்து வாதியை வெளியேற்ற பிரதிவாதிகள் முயற்சித்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. 13.05.2013 தேதியிட்ட கிரயப்பத்திரம் பெயரளவில் எழுதப்பட்டுள்ளததால்தான் அசல் கிரயப்பத்திரம், டி கார்டு உள்ளிட்டயாவும் பிரதிவாதிகள் வசமே உள்ளது என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தில் வசித்து வருவதால்தான், அவர்கள் வசித்து வருவதாக நான் சொல்லும் வீட்டின் கதவு எண் தெரியவில்லை என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் குடியிருந்து வருவதாக சொல்லும் வீட்டிற்கான ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால், சரியல்ல.

9. நான் கடம்பூர் கிராமத்திலேயே வசிக்கவில்லை என்றும், வெளியூரில் வசித்துக்கொண்டு கடம்பூர் கிராமத்தில் வசித்து வருவதாக பொய் சொல்கிறேன்

என்றால், நான் குத்தகைக்கு பயிர் செய்யும் நிலம் மட்டும்தான் வெளியூரில் உள்ளது, எனது வீடு கடம்பூர் கிராமத்தில்தான் உள்ளது, அங்குதான் நான் குடியிருந்து வருகிறேன். நான் வழக்கிற்காக வேண்டி அதுபோல் பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time : 12.13 P.M.

**ஒப்பம்/- ஜி.யுவராஜ்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**